தலைமைச் செயலகத்தில் நேற்று (11.03.2024) உயர்கல்வித் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் 2022-2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த அறிவியல் ஆசிரியர் விருதினை விருதாளர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வின் போது உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக், அறிவியல் நகரம் துணைத் தலைவர்/முதன்மைச் செயலர் தேவ் ராஜ் தேவ், ஆகியோர் உடனிருந்தனர்.

பள்ளிக்கல்வித்துறை - பொது நிறுவன இயக்கம் சார்பில்

வெளிப்படைத் தன்மையான நூல் கொள்முதல் இணையதளம்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

சென்னை,மார்ச்.12-

சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், பள்ளிக் கல்வித்துறை, பொதுநூலக இயக்கம் சார்பில் பொது நூலகங்களுக்கு வெளிப்படைத்தன்மையுடன் நூல்கள் கொள்முதல் செய்வதற்கான இணையதளம் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களால் நேற்று (11.03.2024) தொடங்கி வைக்கப்பட்டது.

வெளிப்படைத் தன்மையான நூல் கொள்முதல் கொள்கையை (2024) அடிப்படையாகக் கொண்டு நூல் கொள்முதல் இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளம் வாயிலாக பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் நூல் கொள்முதல் செய்வதற்குத் தங்களை பதிவு செய்து கொண்டு நூல்களைப் பதிவுக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம். நூல் தேர்வுக் குழுவில், துறை சார் வல்லுநர்கள், நூலகர்கள் மற்றும் வாசகர் வட்ட உறுப்பினர்கள் ஆகியோர் இடம்பெறுவர்.

ஒவ்வொரு நூலகமும் ஒவ்வொரு ஆண்டில் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மதிப்பிலான நூல்களை இணையதளம் வழி தேர்வு செய்து பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் விண்ணப்பம் செய்வதற்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட நூல்கள் இரண்டு ஆண்டுகளுக்கு இணையதளத்தில் இருக்கும். ஒவ்வொரு காலாண்டு வாரியாக நூல் கொள்முதல் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் கீழ்க் கண்ட நூல் கொள்முதல் இணையதள முகவரியில் தங்களைப் பதிவு செய்து கொண்டு https://bookprocurement.tamilnadupubliclibraries.org/ வெளிப்படைத் தன்மையான நூல் கொள்முதல் கொள்கை 2024 யினை பொது நூலக இயக்கத்தின் இணையதளத்திலிருந்து (https://tamilnadupubliclibraries.org/) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்நிகழ்வில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நூல் இரவல் வழங்கும் சேவையினைத் தொடங்கி வைத்தார். முதல் கட்டமாக சிறுவர் நூல்களும், தமிழ் நூல்களும் வாசகர்களுக்கு இரவல் வழங்குவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது. இரவல் எடுத்துச்செல்வதற்கான தெளிவான விதிமுறைகள் அண்ணா நூற்றாண்டு நூலக இணையதளத்தில் (www.annacentenarylibrary.org) உள்ளது.

மேலும், நூலகத் துறை வரலாற்றில் முதன் முறையாக அரசு பணியாளர் தேர்வாணையம் வாயிலாக நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்ட இரண்டு மாவட்ட நூலக அலுவலர் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணையினை மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் பள்ளிக்கல்வித்துறையின் செயலாளர் ஜெ.குமரகுருபரன் பொது நூலக இயக்குநர் க.இளம்பகவத் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு தலைவர் மனுஷ்யபுத்திரன், இணை இயக்குநர் ச.இளங்கோ சந்திரகுமார், அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் நூலகர்கள், வாசகர்கள், பதிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

பட்டு வளர்ச்சி துறை மூலமாக 2 இளம் புழு வளர்ப்பு மையம்!

ஒரு பட்டுப்புழு விதை உற்பத்தி மையம்! 3 பேருக்கு ரூ.1.81 கோடி மானியம்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்!

சென்னை. மார்ச். 12-

குறு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் நேற்று (11.3.2024) தலைமைச் செயலகத்தில் கைத்தறி. கைத்திறன். துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டு வளர்ச்சி துறையின் மூலமாக 2 இளம் புழு வளர்ப்பு மையம். ஒரு பட்டுப் புழு விதை உற்பத்தி மையம் அமைக்க 3 பயனாளிகளுக்கு ரூ. 1.81 கோடி மானியம் வழங்கினார்கள்.

தமிழ்நாடு பட்டுவளர்ச்சித் துறையின் கீழ் செயல்பட்டுவரும் அரசு பட்டுமுட்டை உற்பத்தி நிலையத்தின் மூலமும் தரமான மற்றும் நோயற்ற பட்டு முட்டை உற்பத்தி செய்யப்பட்டு. பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வரும் பட்டு முட்டைத் தேவையினை கருத்தில் கொண்டும். தரமான பட்டு முட்டைத் தொகுதிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு தடையின்றி வழங்கிடவும். தனியார் தொழில் முனைவோரை பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் வகையிலும். 202324 ஆம் ஆண்டின் பட்டுவளர்ச்சித் துறைக்கான அறிவிப்பில் "தனியார் தொழில்முனைவோர் மூலம் ரூபாய் 2 கோடியே 16 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பட்டுப்புழு விதை உற்பத்தி மையம் (வித்தகம்) நிறுவப்படும் என மாண்புமிகு குறு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி. தரமான பட்டுமுட்டைகள் உற்பத்தி செய்து பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கிடும் நோக்கத்தில் திருப்பூர் மாவட்டம் மானுப்பட்டியில் ரூ.2.16 கோடி மதிப்பில் 30 இலட்சம் பட்டுமுட்டைகள் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட பட்டுமுட்டை உற்பத்தி மையம் அமைத்த திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி பா. அகல்யா பெண் தொழில் முனைவோருக்கு உதவித்தொகையாக ரூ.1 கோடியே 62 இலட்சம் ரூபாய் உதவித்தொகை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

பட்டு முட்டை பொரித்தது முதல். இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழு வளர்ப்பில். தரமான மல்பெரி இலைகளை உணவளிப்பதிலும். சுகாதாரம் பேணுவதிலும். தேவையான தட்பவெப்ப நிலைகளைப் பராமரிப்பதிலும். சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது. இளம் பட்டுப்புழுக்களைப் பெற்று பட்டுப் புழு வளர்ப்பு மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் தரமான பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து அதிக வருமானம் பெற முடிகிறது. ஆகவே. இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில். 202324 ஆம் ஆண்டின் பட்டுவளர்ச்சித் துறை அறிவிப்பில் ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் 2 பெரிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கைத்தறி. கைத்திறன். துணிநூல் மற்றும் கதர் துறை முதன்மைச் செயலாளர் தர் மேந்திர பிரதாப் யாதவ் மற்றும் பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் சந்திர சேகர் சாகமூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில்

தமிழ்நாடு அரசின் சாதனைகள் - நலத்திட்டங்கள் புகைப்படக் கண்காட்சி!

மேயர் திருமதி ஆர்.பிரியா திறந்து வைத்தார்!

சென்னை,மார்ச்.12-

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், அண்ணாநகர் மண்டலத்தில் உள்ள அண்ணா கோபுரப் பூங்காவில் 11.03.2024 முதல் 17.03.2024 வரை நடைபெறவுள்ள தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று (11.03.2024) திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகள் மற்றும் தமிழ்நாடு அரசால் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்து அனைத்து தரப்பட்ட பொது மக்களும் அறிந்து கொள்ளும் வகையில், விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு நேற்று (11.03.2024) முதல் 17.03.2024 வரை தொடர்ந்து 7 நாட்கள் சிறப்பு புகைப்படக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு ஏழை, எளிய கிராமப்புற மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை அறிவித்து, அவற்றை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்த திட்டங்களான, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை அளிக்கும் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், மக்களுடன் முதல்வர், நீங்கள் நலமா, கலைஞரின் மகளிர் உரிமைத் திட்டம், நான் முதல்வன், தோழி பணிபுரியும் மகளிர் விடுதி, மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல், மகளிர் சுயஉதவிக் குழுவினர்களுக்கு கடனுதவிகள் வழங்கியது, இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், நமக்கு நாமே திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சென்னை மாவட்டத்தில் கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்கள், போர்க்கால அடிப்படையில் சீரமைக்கப்பட்டதை நேரில் பார்வையிட்டது,

மிக்ஜாம் புயலின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கியது, வேலைவாய்ப்பு முகாம், பல்வேறு துறைகளில் பணியின்போது காலமானவர்களின் வாரிசுதார்களுக்கு பணி நியமன ஆணை வழங்கியது, பள்ளி மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கியது, புதுமைப் பெண் திட்டம் குறித்தும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு பயனடையக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் கூ.பி. ஜெயின், மாமன்ற உறுப்பினர் திருமதி ஜெ. புஷ்பலதா, மத்திய வருவாய் கோட்டாட்சியர் டி.முருகன், மண்டல அலுவலர் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், அண்ணாநகர் மண்டலத்தில் உள்ள அண்ணா கோபுரப் பூங்காவில் 11.03.2024 முதல் 17.03.2024 வரை நடைபெறவுள்ள தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (11.03.2024) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர் திருமதி ஜெ. புஷ்பலதா, மத்திய வருவாய் கோட்டாட்சியர் டி.முருகன், மண்டல அலுவலர் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்டம், ஏற்காடு ஊராட்சி ஒன்றியம், முளுவி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலிக்காட்சியின் வாயிலாக 10 மாவட்டங்களுக்கு பழங்குடியினருக்கான நடமாடும் சித்த மருத்துவக் குழு வாகன வாகனத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (11.03.2024) கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். உடன், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையர் திருமதி மைதிலி கே.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

மலைப் பகுதிகளில் சித்த மருத்துவம் அதிக அளவில் விரும்பப்படுகிறது ! தமிழ்நாட்டின் 10 மாவட்டங்களில்

பழங்குடியினருக்கான நடமாடும் சித்த மருத்துவக்குழு வாகனங்கள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்!

சேலம், மார்ச் 12-

சேலம் மாவட்டம், ஏற்காடு ஊராட்சி ஒன்றியம், முளுவி கிராமத்தில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் சார்பில் 10 மாவட்டங்களுக்கு பழங்குடியினருக்கான நடமாடும் சித்த மருத்துவக் குழு வாகனங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சேலம் மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக நேற்று (11.03.2024) தொடங்கி வைத்தார்.

பின்னர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் பழங்குடியின மக்களின் நல்வாழ்வை மேம்படுத்தும் விதமாக வசிக்கும் பகுதிகளுக்கே சென்று உரிய மருத்துவம் செய்திடும் உன்னத நோக்கில் நடமாடும் சித்த மருத்துவக் குழு புதிதாக உருவாக்கப்பட்டு உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு மாவட்டங்களில் சோதனை முயற்சியில் தொடங்கப்பட்ட நடமாடும் சித்த மருத்துவக் குழு வாகன திட்டம் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம் காரமடையிலும், திருப்பூர் மாவட்டம் எரிசனாம்பட்டுவிலும், தருமபுரி மாவட்டம் சித்தேரியிலும், திண்டுக்கல் மாவட்டம் வடகொஞ்சியிலும், சேலம் மாவட்டம் நாகலூரிலும், தேனி மாவட்டம் ஆகமலையிலும், திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலையிலும், திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரியிலும், கள்ளக்குறிச்சி மாவட்டம் கரியலூரிலும் மற்றும் திருச்சி மாவட்டம் செங்காட்டுப்பட்டி உச்சி ஆகிய தமிழ்நாட்டின் 10 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு தலா ஒரு நடமாடும் சித்த மருத்துவக் குழு என்கிற வீதத்தில் பழங்குடியினருக்கான நடமாடும் சித்த மருத்துவக் குழு அடங்கிய வாகனம் புதிதாக உருவாக்கப்பட்டு இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களின் நோய்களை நீக்கி, நல்வாழ்வு மேம்பட்டு நோயின்றி வாழவும் அவர்களின் வாழ்வு மேம்படவும் இவ்வாகனத்தில் ஒரு சித்த மருத்துவர், ஒரு மருந்தாளுநர், ஒரு பல்நோக்கு பணியாளர் என்கின்ற வகையில் நடமாடும் சித்த மருத்துவக் குழு மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கே சென்று மருத்துவம் பார்க்க இருக்கின்றனர். இதேபோன்று மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், தொழிலாளரைத் தேடி மருத்துவம் திட்டம் போன்ற மக்களைத் தேடி மருத்துவர்கள் என்ற வகையில் கடைக்கோடி மக்களுக்கும் இதுபோன்ற மருத்துவத் திட்டங்களால் பயன்பெற முடிகிறது.

தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள சித்த மருத்துவ பிரிவுகளில் அரசின் மகப்பேறு சஞ்சீவி பெட்டகம் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படுகிறது. பெண்கள் கருவுற்ற நாள் முதல் தொடர்ந்து பிரசவம் நிகழும் வரை மற்றும் பிரசவத்திற்கு பின்னும் மொத்தம் நான்கு பெட்டகங்கள் வழங்கப்படுகின்றன.

சேலம் மாவட்டம், ஏற்காடு, நாகலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 91 பேர் புறநோயாளியாக பயன் பெற்று வருகின்றனர். அதே போல், இங்குள்ள சித்த மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 62 பேர் புறநோயாளியாக பயன்பெற்று வருகின்றனர். ஆங்கில மருத்துவத்திற்கு இணையாக சித்த மருத்துவமும் மலைப் பகுதிகளில் அதிகளவில் விரும்பப்படுகிறது.

இன்றைய தினம் சேலம் மாவட்டம், ஏற்காடு ஊராட்சி ஒன்றியம், வாழவந்தி வட்டாரத்திற்குட்பட்ட நாகலூரில் ஒரு இலட்சம் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் நடமாடும் சித்த மருத்துவக் குழு வாகனம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்களின் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் பல்வேறு நோய்களுக்குத் தேவைப்படும் சித்த மருத்துவ ஆலோசனைகளும் மருத்துவமும், நோயின்றி வாழ்வதற்கான தற்காப்பு வாழ்வியல் முறைகளுக்கான வழிகாட்டலும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையர் திருமதி மைதிலி கே.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.இராஜேந்திரன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு. சௌண்டம்மாள், மரு.யோகானந்த், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மரு.க.பெ. இராமச்சந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் திருமதி.புஷ்பராணி, ஏற்காடு ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் திருமதி சின்ன வெள்ளை, நாகலூர் ஊராட்சி மன்றத் தலைவர் (பொ) திரு. குப்புசாமி, ஏற்காடு ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் சேகர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆ.நா.பார்த்திபன் தலைமை! அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! இன்று

துறைமுகம் கிழக்குப் பகுதி - மண்ணடியில் பொதுக்கூட்டம்!

திண்டுக்கல் ஐ.லியோனி - புலவர் இரெ.சண்முக வடிவேல் - புலவர் இராமலிங்கம் - அறந்தாங்கி நிஷா சிறப்புரை!

சென்னை, மார்ச் 12-

சென்னை கிழக்கு மாவட்டம் - துறைமுகம் கிழக்குப் பகுதியில் - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இன்று (12.3.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணியளவில்தம்புச்செட்டித் தெருவில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்திற்கு 60(அ) வட்டச் செயலாளர் ஆ. நா.பார்த்திபன் தலைமை வகிக்கிறார்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., எஸ். இராஜசேகர்,எஸ்.முரளி,எம். விஜயகுமார், ஜி.எம்.தேன், ப.ஸ்ரீராமுலு, இசட். ஆசாத், என்.பி.எம்.சேக்அப்துல்லா, எம்.இப்ராஹிம் கனி, இரா. கலைச்செல்வி, பி.விஜயகுமார், எம்.வினாயகம், பா.ஜெகதீஷ், பா.பிரதீப் குமார்,எல்.சம்பத்குமார்ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ந.சுந்தரம்,எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி,சி.ப.ஜெயராமன், மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துக்குமார், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம்,த.கதிரவன், எம்.பரத்குமார்,மா.ஜெய்சங்கர்,பா.கதிரவன்,ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை,சேப்பாக்கம், வே.பா.பிரபாகரன், டி.சதீஷ் குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் - தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, புலவர் இரெ.சண்முகவடிவேல், புலவர் இராமலிங்கம், அறந்தாங்கி நிஷா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேயர் பரியாராஜன், துறைமுகம் தொகுதி தலைமையிடப் பார்வையாளர் க.பிரபு, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், துறைமுகம் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள் வெ.பரிமளம், எல்.நவீன், ரமேஜ்ஷெஜயின், அ.மகேந்திரன்,எஸ்.எஸ்.எஸ். முஹம்மது ரபி, எம்.பி. ஏழுமலை, இ.இராஜேஸ்வரி, ஜி. எம்.டி.மணிகண்டன், கே. அண்ணாதுரை,எஸ்.குணசேகரன்,டி.டில்லிகுமார்,கே.எட்வர்ட்கென்னடி,ஹாஜாஜலாலுத்தீன், த. பன்னீர்செல்வம், மு.செஜயவேல், ச.முருகம்மாள், யூ.நாசர், க.கதிரவன், முகமது முக்தார், ஆர்.அன்பு சி.ஆர்.பிரபு, ஆர். ரவி உள்பட பலரும் இதில் கலந்துகொள்கின்றனர்.

வட்டச்செயலாளர் க.கவியரசு நன்றி கூறுகிறார்.

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் கழக தலைவர் - முதல்வர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் மகளிர் தின விழா முன்னிட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே ராஜன், முன்னிலையில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.குமரேசன், பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ் மாவட்ட கழக பிரதிநிதி எம்.சி.எழிலரசு ஆகியோர் வரவேற்புரை ஆற்ற ஏ.சுந்திரி, எஸ்.ஜமுனா, வி. வளர்மதி ஆகியோர் ஏற்பாட்டில் மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் காரம் பாக்கம் க. கணபதி, நலத் திட்ட உதவிகளை வழங்கி துவக்கி வைத்தார் இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாமன்ற உறுப்பினர் கே.நீலகண்டன் மற்றும் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மூத்த முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டனர்.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு,கழக தலைமை இலக்கிய அணி தலைவர் புலவர் இந்திரகுமாரி அவர்கள் தலைமையில் சென்னை க்யூரி மருத்துவமனையில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த மகளிர்க்கு அம் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் திருமதி காயத்ரி விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.